DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.12

Name : **திரு.அஜய்**

Caste:

Father's Name :**திரு.**

Calling :

Village:

Religion :

Taluk :

Age:

3-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கம்பம் கோம்பை ரோட்டில் குடியிருந்து வருகிறேன். டூவீலர் கன்சல்டிங் தொழில் செய்து வருகிறேன். 25.11.2024 ம் தேதியன்று நானும், விஜயும் உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு எங்களது சொந்த விஷயமாக மதியம் 01.00 மணியளவில் சென்றோம். அப்போது கொலை வழக்கு சம்பந்தமாக போலீசார் எங்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் தெரியும் என்று சொன்னோம். அப்போது போலீசார் ஜீப்பில் வந்தார்கள், நாங்கள் பைக்கில் உடன் சென்றோம். நாங்கள் ஊத்துப்பட்டிக்கு சென்றோம். பிருந்தாதேவி என்பவரை காவல் துறையினர் கைது செய்தார்கள் மற்றும் ரித்திக் ரோஷன் என்பவரை போலீசார் கைது செய்தார்கள் அவர்களிடம் வாக்குமூலம் வாங்கினார்கள், வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினார்கள். பல்சர் பைக்கை கைப்பற்றினார்கள் அந்த பைக் ஆனது கருப்பு நிற பைக் ரித்திக் ரோஷன் என்பவரிடமிருந்து அந்த பைக் கைப்பற்றப்பட்டது. அவர்தான் இந்த வழக்கில் ஆஜராகி உள்ள எதிரிகள் இரண்டும் மற்றும் நான்கு. அந்த பைக்கை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் அந்த பைக்குதான் தற்பொழுது என்னிடம்

நீதிமன்றத்தில் புகைப்படமாக காட்டக்கூடிய சா.பொ.5 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12 மற்றும் 13. அவை 2 மற்றும் 4-ம் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்கள் அனுமதிக்கப்பட்ட பகுதி. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்திற்கு நான் செல்லும்போது ஒரு மணி இருக்கும். போலீசார் எங்களை அழைத்துச் சென்று தான் எதிரிகளை கைது செய்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை ஊத்துப்பட்டியில் வைத்து கைது செய்ததாக போலீசார் எங்களிடம் தெரிவித்தார்கள். அவ்வாறு கைது செய்யும் பொழுது அந்த இடத்தில் பேருந்து நிலையம் இருந்ததென்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் 10 – 20 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சியான திவாகர் எனது வீட்டை ஒட்டி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் இறந்து போன நபருக்கு நெருங்கி உறவினர் என்றால் அதுபற்றி தெரியும்.

2. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல எங்கள் முன்னிலையில் கையெழுத்து எதுவும் எதிரிகள் செய்யவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் கையெழுத்து போட்டுக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, வாக்குமூலம் வாங்கினார்கள். பேருந்து நிலையத்தில் வைத்து போலிசார் கையெழுத்து வாங்கினார்கள்.

3. பத்து நிமிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். வாக்குமூலத்தை ஏட்டையா எழுதிக் கொண்டார். அதில் ஏட்டையா சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால் எனக்கு தெரியாது, நான் கையெழுத்து போட்டேன் எத்தனை பக்கம்

வாக்குமூலம் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் மூன்று பக்கங்கள் வாக்குமூலம் வாங்கப்பட்டது. மூன்று பக்கத்திலும் கையெழுத்து இடப்பட்டுள்ளது அவ்வாறு கையெழுத்து போடவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

**4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

4. என்னிடம் கையெழுத்து வாங்கிய ஆவணத்தில் வேறு யாரும் கையெழுத்து வாங்கினார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வேறு யார் என்னுடன் கையெழுத்து செய்தார்களா என்றால் நான் அதை பார்க்கவில்லை. பக்கத்தில் நின்றவர்களிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் நான் மட்டும்தான் கையெழுத்து போட்டேன். கையெழுத்து போட்டு விட்டு வந்து விட்டேன். நான் அரசு ஊழியர் அல்ல என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் 20 கிலோமீட்டர் சென்று தான் கைது செய்யப்பட்ட இடத்தை அடைந்தோம் என்றால் சரிதான்.

5. சம்பவ இடத்திலேயே சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் எங்களை தனிப்பட்ட வகையில் அழைத்துச் சென்று கையெழுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபரும், சாட்சிகளும் எனக்கு உறவினர்கள் என்ற காரணத்தினால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் என் முன்னிலையில் எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் அடையாளம் எதுவும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றால் வெள்ளை கலரில் வாகனத்தில் ஸ்டிக்கர் ஒட்டி சி.ஆர் என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. நான் கூறுவது போல் எந்தவித எழுத்தும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. என் முன்னிலையில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:24:32 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.